

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் முன்னாள் பொதுக் குழு உறுப்பினர் அ.மகாதேவன் 13வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே. ஆர்.பெரியகருப்பன் மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் மகாதேவன் மகன் இளங்குமரன், மருமகள் சுதா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ. வல்லபாய், பேரு ர்கழக செயலாளர் ஆர்.கார்த்திகேயன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி,பேருராட்சிமன்றதுணைத்தலைவர் கான் முகமது அயலக அணி சன் சீமான் சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றியம் காரையூரில் முன்னாள் ஒன்றிய செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் காரை.இரா.செழியனின் 8வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே ஆர். பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் திருமதி மல்லிகா செழியன் மகன்கள், தமிழ் நம்பி வைசாலி, தமிழ்வாணன் சிவசக்தி, மகள் தமிழ் வாணி, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ். ஏ.வல்லபாய்,மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# த.வெ.க. ஆட்சியில் உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காத மாவட்ட நிர்வாகம்!

## தேனி மாவட்டத்தில் இரவு நேரத்தில் ஓட்டல்கள் – டீக்கடைகள் மூடப்படுவதால் பொதுமக்கள் கடும் அவதி!

தேனி, ஜூலை 30-

த.வெ.க. ஆட்சியில் தேனி மாவட்டத்தில் இரவு நேரத்தில் ஹோட்டல்கள், டீக்கடைகள் மூடப்படுவதால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

இரவு நேர பயணிகள், வெளியூரில் இருந்து வருவோர், பெண்கள், குழந்தைகள், முதியோர்கள் மற்றும் நள்ளிரவில் பணி முடித்து வருபவர்கள் என பலரும் உணவு கிடைக்காமல் பசியால் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

**முக்கிய குற்றச்சாட்டு!**

பால் சுடுதண்ணி பண் ருட்டி பிஸ்கட் அத்தியாவசிய தேவையான உணவு நள்ளிரவில் கிடைக்காததால், பொதுமக்களின் அடிப்படை உரிமை பறிக்கப்படுவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**அரசாணையும் உத்தரவும் என்ன ஆனது?**

தமிழ்நாடு முழுவதும் 24 மணி நேரமும் உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகள் இயங்க அனுமதிக்கும் வகையில், முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசாணை வெளியிட்டிருந் தார். மேலும் உயர்நீதிமன்றமும் இதற்கு அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளது.

ஆனால் தேனி மாவட்டத்தில் மட்டும் இந்த அரசாணையும், உயர்நீதிமன்ற உத்தரவும் காற்றில் பறக்க விடப்பட்டு, மாவட்ட காவல் துறை தன்னிச்சையாக இரவு நேரத்தில் கடைகளை மூட வைப்பதாக புகார்கள் எழுந்துள்ளன.

**பொதுமக்களின் கோரிக்கை!**

“உடனடியாக இரவு நேர உணவகங்களை திறக்க, அனுமதிக்க வேண்டும். பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மாவட்ட நிர்வாகம் இதில் உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.




இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகளை சந்தித்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பூபதிமணி, சண்முகநாதன், கோவிந்தராஜன் மனோகரன், கரி முத்துராமலிங்கம் உட்பட கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ஆண்டிப்பட்டி தொகுதி

# வனத்துறைக்கு மகாராஜன் எம்.எல்.ஏ. கோரிக்கை மனு கொடுத்தும் பலனில்லை!

## மக்கள் நலன் கருதி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்!

தேனி, ஜூலை 30-

த.வெ.க. ஆட்சியில் அனைத்து சட்டமன்ற உறுப் பினர்களும் சமமாக பார்க் கப்படும் என்று தமிழக முதல்வர் சட்டசபையில் அறிவித்தார்.

தேனி மாவட்டம் ஆண் டிபட்டி தொகுதி வருஷ நாடு பகுதி மக்களை வெளியேற்ற வேண்டாம்: மாவட்ட நிர்வாகத்திடம் ஆண்டிபட்டி எம்.எல்.ஏ மகாராஜன் கோரிக்கை மனு கொடுத்து பல நாட்களாகியும் எந்தப் பதிலும் இல்லை.

தேனி மாவட்டம், ஆண் டிபட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வருஷநாடு பகுதியில் தலைமுறை தலைமுறையாக வசித்து வரும் மக்களை, த.வெ.க. ஆட்சி மெத்தனப் போக்கால் வனத்துறை திடீரென அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

வனத்துறையின் இந்த நடவடிக்கைக்கு அப்பகுதி பொதுமக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், வருஷநாடு பகுதியில் குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தையும், அவர்களின் தற்போதைய சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு, அவர்களை அங்கிருந்து கட்டாயப்படுத்தி வெளியேற்றக் கூடாது என்றும், அவர்களுக்கு உரிய மாற்று ஏற்பாடுகள் அல்லது சட்டப்பூர்வ தீர்வுகள் வழங்கும் வரை வனத்துறையின் நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் அவர்கள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்.

இருப்பினும், இந்த மனு அளித்து பல நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும், மாவட்ட நிர்வாகத்தின் தரப்பிலிருந்து இதுவரை எவ்வித அதிகாரப்பூர்வ பதிலோ அல்லது சாதகமான அறிவிப்போ வரவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால், எந்த நேரத்திலும் தங்களின் இருப்பிடம் பறிபோய் விடுமோ என்ற அச்சத்திலும், மாவட்ட நிர்வாகத்தின் அலட்சியப் போக்கினால் மிகுந்த மன வேதனையிலும் வருஷநாடு பகுதி பொதுமக்கள் தவித்து வருகின்றனர்.

மக்கள் நலன் கருதி மாவட்ட ஆட்சியரும், மாவட்ட நிர்வாகமும் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### திருப்பத்தூரில் பொதுக்குழு உறுப்பினர்கள்

# அ.மகாதேவன் காரை இரா.செழியன் நினைவு தினம்!

## முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் தி.மு.க.வினர் மரியாதை!

சிவகங்கை, ஜூலை 30-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றிய கழக செயலாளராகவும் பொதுக் குழு உறுப்பினராகவும் தலைமை கழக பேச்சாளராக இருந்தவர் திருப்பத்தூர் அ.மகாதேவன். இதே போல் திருப்பத்தூர் ஒன்றிய செயலாளர் பொதுக்குழு உறுப் பினராக இருந்தவர் காரை இரா.செழியன். இவர்களது நினைவுதினம் ஆண்டு தோறும் சிவகங்கை மாவட்ட கழகம் ம அவர்களது குடும்பத்தினர் சார்பில் அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டு பொதுக்குழு உறுப்பினர் அ.மகாதேவனின் 13 ஆம் ஆண்டு நினைவு தினம், காரை .இரா.செழிய னின் 8வது ஆண்டு நினைவு தினம் சிவகங்கை மாவட்ட கழகம் மற்றும் அவர்களது குடும்பத்தினர் சார்பில் அனுசரிக்கப்பட்டது.

திருப்பத்தூரில் புதுக் கோட்டை சாலையில் உள்ள அ.மகாதேவன் இல்லத்தில் மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட் டிருந்த அ.மகாதேவன் திருவுருவப்படத்திற்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கே ஆர். பெரிய கருப்பன் மலர்மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்ச்சியில் மகாதேவன் மகன் இளங்குமரன் , மருமகள் சுதாஇளங்குமரன், ஆகியோர் மரியாதை செலுத்தினார்கள்.

இதேபோல் திருப்பத்தூர் ஒன்றியம் காரையூரில் முன்னாள் பொதுக் குழு உறுப்பினர் காரை. இரா. செழியன் வீட்டில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டி ருந்த இரா. செழியன் திருஉருவப்ப டத்திற்கு முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே ஆர் .பெரிய கருப்பன் மலர்மாலை அணி வித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார் .

இந்த நிகழ்ச்சியில் திருமதி மல்லிகா செழியன் மகன்கள் தமிழ் நம்பி வைஷாலி, தமிழ்வாணன் சிவசக்தி, மகள் தமிழ்வாணி மற்றும் குடும்பத்தினர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினார்கள். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர்கள். எஸ்.சண்முகவடிவேல், விராமதி மாணிக்கம், பேரூர் கழக செயலாளர் கார்த்திகேயன் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எஸ். எஸ்.ஏ.வல்லபாய்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சன் சீமான் சுப்பையா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் மெ. காளி முத்து, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என். ரவி,ஒன்றிய பேரூர் கழக நிர்வாகிகள் ராம .ரவி, திருநாவுக்கரசு ,உதயம் சண்முகம் பேரூராட்சி மன்ற துணை தலைவர் கான் முகமது , ஒன்றிய பொருளாளர் ஏ.எம். கண்ணன், பிள்ளை யார் பட்டி சதீஷ், பார்த்தசாரதி பாண்டியன்,ஒட்டுனர் நாக ராஜன் இளைஞரணி பஷீர் அகமது, மனோகரன் ,தொ. மு.ச.சண்முகநாதன் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மாணிக்கவாசகம், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார், ஷாஜகான் ,ஒன்றிய பேரூர் ,ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – தோவாளை வடக்கு ஒன்றியம்

# அருமநல்லூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

குமரி, ஜூலை, 30-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், தோவாளை வடக்கு ஒன்றியம், அருமநல்லூர் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 28.07.2026, செவ்வாய்கிழமை அன்று மாலை 6.00 மணியளவில் தோவாளை வடக்கு ஒன்றிய செயலாளர் மோ.பிராங்கிளின் தலைமையில் வீரவநல்லூர் பகுதியில் வைத்து நடை பெற்றது.



கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ஆர்.பூதலிங்கம் பிள்ளை, ஒன்றிய பொருளாளர் T.கண்ணன், முன்னாள் ஞாலம் ஊராட்சி மன்றத் தலைவர் சதீஷ், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகி எபி சாமுவேல், கழக நிர்வாகிகள் இளையபெருமாள், அனந்தம்பிள்ளை, சசி, சுந்தர், நாராயணன் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

அருமநல்லூர் மற்றும் ஞாலம் ஊராட்சி பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் இயங்கி வந்த 4R ஊரக்கோணம் மற்றும் 4C அருமநல்லூர் “D” சர்வீஸ் பேருந்தானது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, அந்த இரண்டு பேருந்துகளின் இயக்கத்தை மீண்டும் துவக்கிட தேவையான நடவடிக்கை மேற்கொள்ள நாகர்கோவில் அரசு போக்குவரத்து பொது மேலாளரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

அருமநல்லூர் ஊராட்சிக்குட்பட்ட வீரப்புலி ஊரில் சுமார் 200 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெறும் பகுதி நேர நியாய விலைக் கடையானது தனியார் வாடகை கட்டிடத்தில் இயங்கி வருகிறது. எனவே, மாவட்ட ஆட்சியர் அவர்கள் பகுதி நேர நியாயவிலைக் கடைக்கு நிரந்தர கட்டிடம் அமைத்து தர தேவையான நடவடிக்கை எடுக்க இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்கப் பட்டது.

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் தோவாளை வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### இந்தியாவின்

# ஏற்றுமதியை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 30-

இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான உத்திகளை வகுக்க, ஏற்றுமதி மேம்பாட் டுக் கவுன்சில்கள் மற்றும் தொழில் சங்கங்களுடன் அரசாங்கம் சமீபத்தில் ஆலோசனைகளை நடத்தியுள்ளதா?



தமிழ்நாடு மாநிலத்திற்கு என பிரத்யேக துறை சார்ந்த ஏற்றுமதி வாய்ப்புகளை, குறிப்பாக ஜவுளி மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், பொறியியல் பொருட்கள், ஆட்டோமொபைல் மற்றும் வாகன உதிரிபாகங்கள், மின்னணுவியல் (எலக்ட்ரானிக்ஸ்), கடல்சார் பொருட்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME) ஆகியவற்றில் அரசாங்கம் கண்டறிந்துள்ளதா?

தமிழ்நாட்டில் உள்ள தொழில்துறைகளின் ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக ஏதேனும் புதிய ஏற்றுமதி வசதி நடவடிக்கைகள், தளவாடக் கட்டமைப்பு (logistics infrastructure), வர்த்தக நிதி உதவி, சந்தை பன்முகத் தன்மை முயற்சிகள் அல்லது மாவட்ட ஏற்றுமதி மேம் பாட்டுத் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளனவா?

அவ்வாறு இருந்தால், அது குறித்த விவரங்கள் என்ன; மற்றும் துறைமுக இணைப்பு வசதியை மேம்படுத்தவும், தளவாடச் செலவுகளைக் குறைக்கவும், ஏற்றுமதி இணக்க நடைமுறைகளை எளிதாக்கவும், தமிழ்நாட்டின் முக்கிய தொழில்சார் மையங்களில் (industrial clusters) இருந்து ஏற்றுமதியை ஊக்குவிக்கவும், மற்றும் இந்தியாவின் ஏற்றுமதி இலக்குகளை அடைவதில் மாநிலத்தின் பங்களிப்பை அதிகரிக்கவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என்று கேள்விக்கு

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் பதில் வருமாறு:-

முதல் இந்தியாவின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான உத்திகளை வகுக்கவும், துறை சார்ந்த வாய்ப்புகளைக் கண்டறியவும், வர்த்தகம் சார்ந்த பிரச்சினை களுக்குத் தீர்வு காணவும் ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில்கள் (EPCs), தொழில் சங்கங்கள், மாநில அரசுகள் மற்றும் பிற பங்குதாரர்களுடன் அரசாங்கம் தொடர்ந்து ஆலோசனைகளில் ஈடுபட்டு வருகிறது என்று கூறினார்.

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

## பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம் மற்றும் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

நாமக்கல் மேற்கு மாவட்டம், பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **பி.யுவ ராஜ்**, (30, ஆலாம்பாளையம் அஞ்சல், குமாரபாளையம் வட்டம், நாமக்கல் மாவட்டம்) அவர்கள் பள்ளிப்பாளையம் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராகவும்;

கபிலர்மலை தெற்கு ஒன்றியம், வெங்கரை பேரூர்க் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **கா.தீபன்**, (123, மேற்கு தெரு, கொளக்காட்டுபுதூர் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் 637 208) அவர்கள் வெங்கரை பேரூர்க் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 29.07.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.